ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

பிரியவாசகர்களே ! நாம் நாடோறும் ஸூரியன் உதிக்க ஐந்துநாழிகைக்குமுன்னமேயே நித்திரையை விட்டெழுந்து பகவானின் பாதமலர்களைத் தியானித்துக்கொண்டு உச்சஸ்வரத்தால் பகவத்ஸ்தோத்திரங்களை ஜபித்துக்கொண்டு தினந்தோறும் செய்யவேண்டிய காரியங்களை அப்போதே ஒருதடவை ஸ்மரித்துக்கொள்ளவேண்டுமென்றோம். இவற்றைப்போலவே ஸூரியோதயத்துக்குமுந்தியே சரீரசுத்தியும் செய்துகொள்ளல்வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்கு சரீராரோக்யமே முதற்காரணம். ஆதலால் மரணபரியந்தம் தம், தம் சரீரத்தை வியாதியடையாவண்ணம் பாதுகாப்பது மிக அவசியமாகும். அதின் பாதுகாப்புமுறைகளையும் நாம் உணர்ந்துகொள்வது முக்யமாகும். காலந்தவறாமல் ஒழுங்காகப் போஜனம் செய்துகொண்டுவருவதுபோல் உட்கொண்ட மலஜலாதிகளையும் காலந்தவறாமலேயே ஒழுங்காகவே மோசனஞ்செய்துகொண்டுவருவதும் ஆரோக்யநிதானந்தான். மலஜலங்களையடக்கினால் வியாதியுண்டாகும் என்றும் மலஜலம் தங்காமல் வெளிப்படும்போதுத்தில் வாதபித்த சிலேஷ்மங்கள் தம், தம், நிலையையடைந்து ஜாடராக்நியின் விருத்தியும் ஆரோக்யமும்உண்டாகும், வியாதிகள் அணுகாதென்றிவ்வாறு வைத்தியசாஸ்திரங்களிலும் பிரஸித்தம். மகரிஷிகள் நமக்கு உபதேசித்தருளிய வைதிக காரியங்களுக்கு திருஷ்டப்பிரயோஜனம், அதிர்ஷ்டப்பிரயோஜனம் இவ்விரண்டுமுண்டு. அவைகளை நம்பிக்கையுடன் அனுஷ்டிப்பவர்களுக்கு அதிர்ஷ்டப்ரயோஜனமேற்படுவதில் ஸந்தேகமாயினும் திருஷ்டப்ரயோஜனத்தில் கொஞ்சம்கூட ஸம்சயமில்லை. ஆதலால் நாடோறும் சாஸ்திரவிஹிதமான மலஜலவிஸர்ஜனகாரியத்தைக்காலையிலும் மாலையிலும் தவறாமல்செய்து சரீராரோக்யத்துடன் புருஷார்த்தங்களைத் தேடிக்கொள்வோமாக. சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்ய தர்மம்.

விபவ-௵ பங்குனி-௴ ௧௫௳

## மூத்தோர்சொற்படி நடப்பது நன்று.

பிரத்தியக்ஷத்தாலும், அதைமுன்னிட்டே ஜீவிக்கும் அனு
மானத்தாலும் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயம் ஸ்வல்பமே.
ஏனெனில்— அவைநிகழ்காலத்தில், மறைவில்லாமல், ஸமீபத்தி
லுமிருக்கும் விஷயங்களை மாத்திரம் காட்டுகின்றன. நாம்தெரிந்து
கொள்ளவேண்டிய விஷயங்களோ மிகவதிகமாயிருக்கின்றன.
அவைகளைத்தெரிந்துகொள்ள இவை போதாதென்றே சப்தப்
பிரமாணமென்ற ஆகமப்பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டது. அத
னால் நாம் இறந்தகாலம் வரும்காலத்திலுள்ளதும், வெகுதூரத்தி
லும் மறைந்துமிருப்பதும் இஹலோக பரலோகத்திலுள்ளது
மாகிய பலவிஷயங்களைத்தெரிந்து கொள்ளுகிறோம். இந்த சப்த
பிரமாணமில்லாவிடில் முன்யுகாந்தரங்களில் நடந்தவைகளையும்,
லோகாந்தர நடவடிக்கைகளையும், எவ்வளவு புத்திசாலியாயிருப்
பினும் ஊஹித்துத்தெரிந்துகொள்ளமுடியாது. அத்தகைய ஆகம
பிரமாணத்தால் ஸிருஷ்டிகாலந்தொடங்கி நாளது வரையிலும்
பின்னிட்டு பிரளயகாலபரியந்தமும் வர்ணாசிரமப்பிரிவினை, அதன்
உயர்வு தாழ்வு, அதற்குரியதர்மங்கள், அவற்றின்பயன் முதலிய
வைகள் நீடித்திருக்கக்கூடியதாக போதிக்கபடுகிறதேயன்றி ஒரு
காலத்தில் வர்ணாசிரமப்பிரிவினைமுதலியன இல்லையென்றுகூறப்பட
வில்லை. அப்படியிருக்க தற்காலத்தில் விதவாவிவாஹகக்ஷிக்காரர்,
பிரௌடாவிவாஹ ஸ்தாபகர், பாலிகாவிவாஹப்பற்றுள்ளவர்,
ஸ்திரீஸ்வாதந்திரிய நிர்வாஹகர், சுயமரியாதை சங்கத்தார், ப்ராம்
மணதூஷகர் முதலிய பல கூட்டத்தார்கிளம்பி சுருதி ஸ்மிருதி
முதலியவையெல்லாம் சுயநலத்தைப்பாராட்டிய சிலர் கற்பித்த
தென்றும், அதனால் அதிற்கூறபடுவதைக்கேழ்க்கக்கூடாதென்றும்
முன்காலத்தில் அந்தவர்ணாசிரமப்பிரிவினையே கிடையாதென்றும்,
புதிதாகக்கற்பிக்கப் பட்டதென்றும் பலவாறாகக்கண்டபடி. பேசு

கிறார்கள். பத்திரிக்கைகளிலும் பிரசுரிக்கிறார்கள். இவர்கள்வார்த்தைப்பிரமாணமாம். வேதம் சொல்லுவது பிரமாணமில்லையாம். என்னவிபரீதகாலம் ஆகம ப்ரமாணங்களாக வழங்கப்படுவது ஆதிமுதலிதுவரை பதினெட்டு வித்தியாஸ்தாபனங்களாம். அவைகளாவன— ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் ஆகிய வேதம்நான்கு. ஆயுர்வேதம், தனுர்வேதம். காந்தர்வம் (ஸங்கீதம்) அர்த்த சாஸ்திரம், ஆகியஉபவேதம்நான்கு. சிக்ஷை-வியாகரணம்-சந்தஸ்-நிருக்தம்-ஜ்யோதிஷம்-கல்ப்பம் ஆகிய அங்கங்கள் ஆறு, மீமாம்ஸை-நியாயம்-புராணம்-தர்மசாஸ்திரம்ஆகிய உபாங்கங்கள் நான்கு. ஆகப்பதினெட்டுகளாம். இவற்றுள் ஒவ்வொன்றிலும்கணக்கில்லாதகிரந்தங்கள் இருக்கின்றன. அவைகளும் ஒருபுருஷாயுஸ்ஸிலும் பூர்ணமாகப்பார்த்து விடமுடியாது, ஆயினும் பால்யம்முதற்கொண்டே இந்தப்பதினெட்டு வித்தியாஸ்தானங்களுள் ஒன்றிலாவது அனேகங்களிலாவது ஆசைவைத்து புத்தி சக்திக்குத்தக்கபடி குருமுகமாகக்கற்றுக்கொண்டு அந்தந்தக்கலைகளில் பண்டிதர்களாகப்பிரகாசித்துவரும் பெரியோர்களுக்கும் தெரியாத "வர்ணாசிரமதர்மமென்பதுசிலருடையகட்டுப்பாடுஎன்றவிஷயம்எப்படிதெரிந்ததோ தெரியவில்லை-இந்தப்பதினெட்டு வித்யாஸ்தானங்கள் ஸம்பந்தப்பட்ட எல்லாகிரந்தங்களிலும் ஒரே அபிப்பிராயமாக வர்ணாசிரமதர்மவியவஸ்தை கூறியிருப்பது அவ்வளவும் பிசகாம். இவர்கள் சொல்லும் இந்த ஒருவார்த்தைமட்டிலும் பிரமாணவாக்காம். முன்யுகங்களில் இவ்வளவையும் உபதேசமாகச்சிரமேற்றாங்கி அதிற்கிணங்க செங்கோல் செலுத்திய மன்னரும், அப்படியே வைசியரும் மற்றவர்களும் "எல்லோருக்கும் ஹிதமானவழி இது" என்று அனுஷ்டித்து வந்தவர்களெல்லாம் பைத்தியக்காரர்களாம். தற்காலத்தியவர்கள்தான் அவர்கள் வலையிற்சிக்கிக்கொள்ளாத புத்திசாலிகளாம். இவர்களது "சுயமரியாதைச் சங்கம்" என்கிறவார்த்தையினாலேயே இவர்கள் சுயநலத்திற்காக வேலைசெய்கிறார்களா அல்லது பரோபகாரத்திற்காகவேலைசெய்கிறார்களா வென்பதுநன்றாய்விளங்குகிறது நமது முன்னோர்களைச்சொல்லுகிற இடங்களிலெல்லாம் परोपकारनिरता: பரோபகாரத்திலேயேஆஸ்தையுள்ளவர்களென்றுகூறப்படுகின்றதேயன்றிஒருவிடத்திலாவதுதற்காலத்தியவர்களைப்போல சுயகாரிய துரந்தரர்களென்று கூறப்படவில்லை. அன்றியும் இவர்கள் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கும் பொழுது

उपकारपरो नित्यमपकारपरेऽप्यरौ ।

எப்பொழுதும் தனக்கு அபகாரம் செய்வதையே பெரிதாக நினைத்த சத்ருவிற்கும் நீ உபகாரத்தையே செய்யவேண்டுமென்பதாக உபதேசிக்கிறார்கள். அன்றியும் யாராவது தன்னை நிந்தித்துவிட்டாலும் அவரிடத்தில் நம்முன்னோர்கள் கோபித்துக்கொள்ளுவதில்லை. ஆனால்:—

सततसुलभदैन्ये निस्सुखे जीवलोके
यदि मम परिवादात्प्रीतिमाप्नोति कश्चित् ।
परिवदतु यथेष्टं मत्समक्षं तिरोवा
जगति हि बहुदुःखे दुर्लभः प्रीतियोगः ॥

"எப்பொழுதுமே ஏழ்மையையடைந்து சுகமேயில்லாத ஜீவராசியில் யாரேனுமொருவன் என்னை நிந்தித்து ஸந்தோஷமடைவானாகில் இஷ்டப்படி என் முன்னிலையிலேயே நிந்திக்கட்டும். ஒரு ஸமயம் எதிரில் நிந்திக்க ஸங்கோசப்படுவானாகில் என்னைக்காணாதவிடத்திலாவது நிந்தித்துக்கொள்ளட்டும். ஏனெனில் மிக்கவாறும் துக்கத்தையே அனுபவிப்பவருக்குஸந்தோஷமுண்டாவது அரிதல்லவா? என்னை நிந்தித்து ஸந்தோஷப்படுவதற்கு நானல்லவா நிமித்தம்? பணத்தால் காசால் ஸந்தோஷப்படுத்தமுடியாது. இப்படியாவது ஸந்தோஷப்படுகிறேனென்றால் அதைத்தான் நாம் தடைசெய்வானேன்? எப்படியாவது ஸந்தோஷப்படட்டும்" என்று இவ்வாறாக ஸந்தோஷப்படுகிறார்கள். இப்படி நினைப்பவர்களா சுயநலம் பாராட்டுகிறவர்கள்? ஒவ்வொரு மஹான்களின் சரித்திரங்களைப்பார்த்தால் அவர்கள் உலகத்திற்காக உழைத்திருப்பது இவ்வளவென்று தெரியும். தற்காலத்தியவர்கள் அதையெல்லாம் பார்க்கமாட்டார்கள். இவர்களுக்கு ஏதாவது இஷ்டப்பட்ட விஷயத்திற்கு வேண்டுமானால் மனுஸ்மிருதியில் கூறியிருக்கிறதென்று மனுஸ்மிருதியில் கூறப்படாத விஷயத்தைச்சொல்லி நமது சிறுவர்களின் மனதைக்கலைக்கிறார்கள். ஒருவர் எழுதுகிறார்:— "மனுஸ்மிருதியில் கதரைத்தான் கட்டிக்கொள்ளும்படி கூறியிருக்கிறது. அதற்கு வியாக்யானம்செய்த குல்லூகபட்டரும் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றார்" என்று எந்தவசனத்தில் இப்படிச்சொல்லப்படுகிறதோ தெரியவில்லை. எங்கேயாவது ஒரு வசனத்தில் இப்

படி ஆபாஸமாகப் பொருள்தோன்றி அது அந்த விஷயத்திற்கு பிரமாணமாவதுபோல் வர்ணாச்ரமதர்மத்தைப்பற்றியே ஸ்மிருதி முழுமையும் கூறுகின்றதே, அதிலும் அந்த ஸ்மிருதி பிரமாணந்தானேயென்றால் அப்பொழுது அவர்களுக்கு மனுஸ்மிருதியில் கடுங்கோபமுண்டாய்விடுகின்றது. அதனால் தன் கையில் ஏதாவதொரு மனுஸ்மிருதி புஸ்தகம் கிடைத்துவிட்டால் அதை தீவைத்துப்பொசுக்கிவிடுகிறார்கள். இப்படிப் பிரமாணக்ரந்தத்தையெல்லாம் பிரமாணமில்லையென்று சொல்லுமிவர்களது வார்த்தை எவ்வளவு பிரமாணமாகுமென்பதை பக்ஷபாதமில்லாமல் ஆலோசிக்க வேண்டும். ஒரு விஷயத்தில் பிரமாணமென்றால் அது அதில் கூறப்படும் எல்லா விஷயங்களிலும் பிரமாணமாயிருக்கவேண்டுமேயன்றி ஏகதேசம் பிரமாணம், மற்றவை அப்பிரமாணம் என்று அங்கீகரிப்பது பிராமாணிகர்களுக்கழகன்று. தன் குழந்தைகளின் க்ஷேமத்தைக்கோரும் மாதாபிதாக்கள் போதிப்பது தற்சமயம் கேட்பதற்கும் அதன்படி நடப்பதற்கும் கஷ்டமாகத் தோன்றி "நமதிஷ்டப்படி நடக்கவிடமாட்டேனென்கிறார்களே, இவர்கள் எப்பொழுது தொலையப்போகிறார்கள்" என்று குழந்தைகள் நினைத்தாலும் அந்தப்படியே வெளியிட்டுச் சொன்னாலும் அது எப்படி சிறுவர்களுக்கு க்ஷேமகரமாகாதோ அது போலவே நமக்கு வரப்போகும் ஜன்மஜன்மாந்தரங்களிலும் க்ஷேமத்தையே கோரிக்கொண்டு அதற்கு அநுகூலமாக வர்ணாசிரமதர்மங்களை போதிக்கும் பெரியோர்களது உபதேசம் தற்போது கேட்பதற்குச் சஹிக்கமுடியாமல் உபதேசிப்பவர்களிடம் கோபத்தையுண்டுபண்ணிவிடுவதாக நினைப்பதும், வெளியிட்டுச் சொல்வதும் க்ஷேமகரமாகாது. சிறுவர் விபரீதமாக அறியாமையால் நினைத்துக்கொண்டாலும் சொன்னாலும் அதை லக்ஷியம் செய்யாமல் மாதாபிதாக்கள் சண்டைபோட்டாவது ஹிதத்தையேபோதிப்பதுபோல நமது பெரியோர்களது உபதேசத்தை குருபாரம்பரையாகப்பெற்ற மஹான்கள் தற்காலத்தியவர் எவ்வளவு கடுமையாய்ப் பேசினாலும் அதையெல்லாம் லக்ஷியம்செய்யாமல் ஹிதத்தையே போதித்துவருகிறார்கள். அதைக்கேட்டு அதன்படி நடப்பதே நலமானதுபற்றி யாவரும் அந்த மஹான்களது உபதேசத்தை ஆதாவாகக்கேட்டு வர்ணாச்ரமதர்மத்தையநுஷ்டித்து ஸுகப்படுவார்களாக.

———

ப+ர்.

# கம்பராமாயணம்.

(160-வது பக்கத்தொடர்ச்சி.)

ஒருவன்தான் கீழ் கூறிய தமிழ்நூல்களை வடநூல்களுக்குப் பதிலாக வாசித்துப் பிரசிங்கிப்பின் இதனால் படிப்போருக்கும் கேழ்ப்போருக்கும் எற்படும் தோஷங்கள்.

व्यासवाण्यादिगाथाश्च यस्मिन्स्थाने करोति वै ।
न तत्र प्राकृतां गाथां कुर्याद्धर्मार्थधीः पुमान् ॥
कुर्याच्चेत्प्राकृतां गाथां तत्र कर्ता विनश्यति ।
व्यासगाथां खिलं कृत्य गाथां यः प्राकृतां चरेत् ॥
सोऽग्रहारं खिलीकृत्य चण्डालस्थानकृद्भवेत् । (हेमाद्रौ)

தர்மமர்த்தம் இவைகளை அடைய எண்ணங்கொண்ட ஒருவன் வியாஸர் முதலியோரால் இயற்றப்பட்ட செய்புள்களைப் படிக்குமிடத்து தேசபாஷைகளிலியற்றியவைகளைப் படித்தல் கூடாது. அவ்வாறு செய்யின் அவன் நாசமடைவான்.

வியாஸர் முதலியவர்களின் பாடல்களை நாசம் செய்து அதற்குப் பதில் பிராகிருத பாடங்களைப் பாடின் அஃது பிராமணர்கள் வஸிக்கும் தெருவை நாசம் செய்து பறையர்களிருப்பிடமாகச் செய்வதையொக்கும்.

यदि श्रृणोति भाषाभिः पुराणं निर्मितं नृभिः ।
श्रोता रौरवमाप्नोति वक्ता चण्डालतां व्रजेत् ॥ (हारीतः)

'ஸாதாரணமனிதர்களால்' பேசும் பாஷைகளாலியற்றப்பட்ட புராணத்தை யொருவன்கேட்டால், கேட்பவன் நரகத்தையடைகிறான். சொன்னவன் பறையனாகிறான்.'

कृत्रिमाणि पुराणानि पुमान्न श्रावयेन्नृप ।
यदि श्रृणोति स भवेत् निर्जले ब्रह्मराक्षसः ॥ (शंखः)

'மனிதர்களாலியற்றப்பட்ட புராணங்களைக் கேழ்கச்செய்யக் கூடாது. அப்படிகேட்பவன் நீரில்லாவிடத்தில் பிரம்மராக்ஷஸனாகப்பிறப்பான்.

पुराणं कल्पितं श्रुत्वा पठित्वा च नरो व्रजेत् ।
रौरवादींश्च नरकान् तस्मात्तं वर्जयेन्नृप ॥ (ब्रह्माण्डे)

மனிதர்களியற்றிய புராணங்களைக் கேட்பினும், படிக்கினும், ரௌரவமென்னும் நரகமடைவார்கள். ஆகையாலப்புராணங்களை விட்டொழிக்கவேண்டும்.— என்று ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. தேசபாஷைகளாலியற்றிய வின்னூல்கள் கேழ்குங்கால் செவிக்கினிமையா யிருப்பினும் விடுபுகுங் காலவ்வழியிற்றுள் போற்றடைசெய்யும்.

भाषया रचितं शास्त्रं इह लोके सुखप्रदम् ।
परलोके च भयदं तस्मात्तं परिवर्जयेत् ॥

பாஷையாலியற்றிய சாஸ்திரம் இவ்வுலகில் சுகமளிப்பினும் பரலோகத்தில் துன்பமளிக்கும், ஆகையால் ஒழித்தல் வேண்டும் என்று பாரத சேஷதர்மத்தில் பகவான் கூறியிருக்கின்றனர்.

भाषारचितशास्त्रेषु गान्धर्वेषु रताश्च ये ।
तेषां सङ्गमपि त्याज्यं परत्र हितकाङ्क्षिभिः ॥

'பரலோகத்தின் நன்மையைக்கருதுவோர்கள், பாஷசாஸ்திரங்களிலும் ஸங்கீதசாஸ்திரங்களிலும பற்றுடையவர்களின் சேர்க்கையைக்கூட விட்டொழித்தல் வேண்டும்' என்றுமுரைத்திருக்கிறது.

எல்லா இராமாயணங்களுக்கும் மூலகாரணம் வான்மீகி இயற்றியதல்லவா? பிம்பமிருக்கப்பிரதி பிம்பத்தை யொருவன் விரும்புவானு? பிம்பத்தின்மேன்மை பிரதிபிம்பத்திற்குண்டாகுமா? அப்பிரதிபிமபத்திட மெல்லாம் தோன்றினும் ஜீவன் தோன்றுமா? தோன்றுது. ஜீவன் பிம்பத்தினிடத்தேயேயுள்ளது.

அதுபோல் நம்புலனுக்கெட்டாத ஜீவன்போன்ற தோர்தர்மம் (இதனை அபூர்வம்என மீமாஸ்கர் கூறுவர்) வடநூல்களிலமைந்துள்ளது இது மொழிபெயர்க்கப்பட்ட பாஷாநூல்களிலில்லை. 'व्रीहीन् वहन्ति' அரிசியை உரலிற்குத்தித் தயார்செய்யவேண்டும் என்று வேததிற் கூறியிருக்கின்றது. அதாவது யாகத்தில் சருபுரோடாசத்திற்குவேண்டிய வரிசியைத்தயாரிக்க,கையாலுரித்தல் யந்திரத்திலரைத்தல் முதலிய பலவழிகளிருப்பினும். அதனை உரலிற்குத்தியே தயாரிக்கவேண்டும் அப்படிச் செய்வதனுல் அவ்வரிசியிலோர்விசேஷம் (அபூர்வம்) உண்டாகிறது. அதனை நாம் கண்கூடாகக் காணமுடியாவிடினும், நாம்செய்யும் வேள்வியைக்குறைவர நிறைவேற்றி சபலமாக்குகிறது.

அதுபோல் வடமொழியிலியற்றியுள்ள புராணங்களை பாஷா நான்முகமாயறியமுடியினும் இவ்வட நூலினின்றே அறியவேணு மென்பதை ஓர் நியமவிதி யெனக்கூறலாம். இதனை நாம் புறக் கணித்தல் கூடாது. இதற்குப் பிரமாணங்கள் கீழ்கூறிய முக்கால முமுணரவல்ல முனிவர்களின் மொழிகளே.

நாம் நமது கர்மாக்களில் வேதத்தை மொழிபெயர்த்துப யோகிக்கின்றோமோ, ஐந்தாவது வேதமாகக் கருதப்படும் புராணத் தைமாத்திரமவ்வாறு செய்வது ஸரியா?

இதனால் ஸம்ஸ்கிருதகந்தமேயறியாமல் இங்கிலீஷ், தமிழ் இவைகளில் மொழிபெயர்க்கப்பட்ட இராமாயணம், பகவத்கீதை உபநிஷத் முதலியவைகளைப் படிப்பதனால் ஏற்படும் பயன் நன்கு வெளியிடப்பட்டது. தென்மொழியையே தன் மொழியாகக் கொண்டு, அம்மொழியிலியற்ற நூல்களையே வேதசாஸ்திரங் களாகக் கொண்டாடு மந்தணர்களினந்த நிலையைப்பற்றி அதிக மிங்கு கூறத்தேவையில்லை.

ஆதலால் ஆர்யமதத்திலுதித்த வேதியர் யாவரும் ஸம்ஸ்கிரு தம் பயின்று அப்பாஷையிலுள்ள நூல்களையே படிக்குமாறு வேண்டுகின்றனன். தாத்காலிகஸந்தோஷத்தைக்கருதி வீணில் மொழி பெயர்ப்பைமாத்திரம் படித்து பாவத்திற்குப் பாகியாகா தீர்கள். இராமாயணப்பிரசங்கிகளே. கம்பராமாயணம் முதலிய வற்றை வால்மீகிராமாயணஸ்தானத்தில் வைத்து பிரசங்கிக்காம லிருக்குமாறு வேண்டுகின்றனன்.

ஸ்திரீகளும் சூத்திரர்களும் முக்கியமாக இத்தென்மொழி நூல்களையே படிப்பதும் பிரஸங்கிப்பதும் பொருந்தும். இனி அந்தணர்களனைவரும் வடமொழி பயின்று வடமொழியிலுள்ள வால்மீகிராமாயணம் முதலியவைகளையே படித்தும், பிரஸங்கித் தும், படிப்போரும், கேட்போரும் நம்மிறைவன் திருவருளால் ஸர்வஸௌபாக்யஸம்பத்தையும் பெருமாறு பின்னொருமுறை வேண்டுகின்றனன்.

பண்டித. ஸ்ரீ. வைத்தியநாதசாஸ்திரி.

ஸரஸ்வதி மஹால்,

தஞ்சாவூர்

# வேதமே விளக்குகிறது.

மகான்களே!

இவ்வருடம் வெளிவந்த "ஆர்யதர்மம்" ஒன்பதாவது ஸஞ்சிகையில் V. ஜகதீச்வாசாஸ்திரி அவர்கள் எழுதிய "பக்தியோகம்" என்ற வியாஸத்தில் இவ்வுலகில் விக்கிரகாராதனத்தை கிரிஸ்துவர்களும், மகம்மதியர்களும்தான் அங்கீகரிப்பதில்லை. மற்றவர்கள் யாவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்று நிச்சயப்படுத்தி வரைந்திருப்பதைத்தொடர்ந்து அவ்விஷயமாக நாம் அறிந்துகொள்ளவேண்டிய சிலவற்றை எழுத எண்ணங்கொண்டேன். உலகில் விக்கிராராதனத்தை ஸர்வமதஸ்தர்களும் ஒப்புக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதுவும் வேத தத்துவத்தையே கடைப்பிடித்துமிருக்கிறது. எங்ஙனமெனில்

**यस्य आपः शरीरं यस्य पृथिवीशरीरम् ।**

என்ற உபநிஷத்வாக்கியத்தால் ஜடபதார்த்தமான ஜலம், மண் இவைகளில் சிதானந்தகனமான பிரும்மம், வியாபித்திருப்பதாக அறியப்படுவதால் ஸகல வஸ்துக்களும் பிரும்மசரீரமென்றும் எந்த ஜடபதார்த்தத்திலும் ஈசனை தியானித்து பூஜிப்பது பிரும்மத்தின் உபசாரமேயாகிறதென்றும் விளங்கிவிட்டது.

"விரும்பும் சரியைமுதல் மெஞ்ஞானமொருநான்கும்
அரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே."

என்பதால் விருக்ஷமொன்றில்லாமல் கனிபெறமுடியாது, அக்கனியும் அரும்பு, மலர், காய் இவ்வைகளன்றி பெறமுடியாது என்பதுபோல ஞானமாகிய கனியையளிப்பது விக்கிரகமாகிய விருக்ஷம். அந்த விக்கிரகரூபமான விருக்ஷத்திற்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகள் முறையே அரும்பு, மலர், காய், கனியாகும். இதனால் விக்கிராராதனம் ஞானக்கனியளிக்குமென்பது ஸர்வமதஸ்தர்களுடைய கொள்கை.

உலகத்தில் ஈசனை மூன்றுவழிகளாக தியானிக்கிறார்கள். அதாவது ரூபம், நாமம், ஈசுர சைதன்னியபுருடர் இம்முறை ஸகல மதத்திலுமிருந்துதான் வருகிறது. ரூபாதிகள் மூன்றும் பாஹ்ய பக்தியெனப்படுகிறது. இதிலிருந்து நிராகாரபக்தியுண்டாகிறது. நிராகாரபக்தியாகிய உயர்ந்தபடியை ஏறிச்செல்லும்படி நமது

பாதத்திற்குத்தகுந்த சக்தியை அளிப்பது ரூபாதிகளான பாஹ்ய பக்தி நியமங்கள். இதுவே விக்கிராராதனம்.

விக்கிராராதனத்தைஒப்புக்கொள்ளாத புத்தர்களும் அரேபியாவில் (க்யாபா) என்ற ஆலயத்திலிருக்கும் கல்லொன்றை முத்தமிட்டவன். பாமபதமடைகிறனென்றும் (ஸிம் ஸிம்) என்ற கிணற்று ஜலத்தை சிறிதுகுடித்தால் பிரும்மபதமடைந்து விடுவானென்றும், (கோமுன்) என்ற கிரந்தத்தை ஈசனுகத்யானித்து வந்தால் மோக்ஷம் பெறலாமென்றும் நம்பிக்கையுடன் அனுஷ்டித்து வருகிறார்கள்.

கிரிஸ்துவர்களும் ஆசார்யனது தாயின் விக்கிரகத்தை தெய்வமாக பாவித்து வாஸனை, தீபம், இவைகளால் பூஜித்துவருவதும் தவிற (பைபில்) என்ற கிரந்தத்தை தெய்வமென உபாஸித்தும் வருகிறார்கள்.

நாமும் (கங்கா) ஜலத்தைப்பரிசுத்திபெறபக்தியுடன் அருந்துகிறோம், ஈசவிக்கிரகத்தை பூஜிக்கிறோம், பாமபாகவதர்களை ஈசன் எனக்கருதிவருகிறோம், இதனுல் ஸகலமதஸ்தர்களும் நமது வேத தத்துவத்தையே கடைப்பிடித்தவர்கள் என்பதில் என்ன ஸந்தேகம்?

முன் தெரிவித்த ஜலம், மண், ரூபம், நாமம், சைதன்னிபுருடர் இதில் எதாவதொரு ரூபத்தைக் கைக்கொள்ளாத மதமொன்றும் உலகில் இல்லையென்று விளங்கிற்று. நுட்பமாகப் பார்த்தால் உபநிஷத்தத்துவத்தையே கைக்கொண்டு ஸகலமதங்களும் விளங்கிவருகிறபடியால் ஸகலமதத்திற்கும் உற்பத்திகாரணம் வேதநியமம் பெற்ற நமது "இந்துமதமே" இதனுல் விக்கிராராதனத்தை அங்கிகரிக்காத மதஸ்தர்களில்லை என்பதை நாம் அறிந்து கொள்வோமாக. சுபம்!

## வர்ணாச்ரம தர்மம் ஆவசியமா.

ஆஸ்திகர் காள்!

நமதுமுன்னோர்களான ரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இந்து ஸமுதாயரீதிக்கு (வர்ணாச்ரம தர்மம்) எனப்பெயர், ஆதியில் இந்ததர்மத்தை வகுத்தவர் யாரெனில்,

**वर्णानामाश्रमाणाञ्च या मर्यादा मया कृता ।**

பிராம்மணாதிவர்ணங்களுக்கும், பிரும்மசர்யாதி ஆச்ரமங்களுக்கும் யாதொருமரியாதையானது (என்னால்) வகுக்கப்பட்டிருக்கிறதோ என்றபகவத் வாக்கியத்தால் பகவானே வகுத்தவனாகிறார். அவரது அம்சமாக அவதரித்தவரும், வர்ணாசிரமதர்மநியமங்களை பாரதாதிநூல்களின்வாயிலாக வெளிபிட்டவரும் வேதவியாஸர் என்ற மகானாவர். இம்மஹானின் நியமங்களையனுஸரித்து வர்ணாசிரம தர்மமுறைகளைக் கையாண்டுவந்தவர்கள் நமது முன்னோர்களான ரிஷிசிரேஷ்டர்கள். இவர்கள் வனங்களில் வஸித்து ஸாதனபஜனம் செய்து ஆத்மஞானம்பெற்று விளங்கிவந்தார்கள். இவர்களே இந்துமதப்பிராமாணிகர்கள், மனிதப்பிறவி மேன்மைபெறக்கூடிய ஸமுதாயபிரதானகார்யங்களை சுதேசராஜாங்கங்களின்மூலமாக அநுஷ்டானமுறையில் கொண்டுவந்தவர்களும் இவர்களே. அழிவற்ற ஆத்மஞானத்தை ஆசாரவழியாகப்பெற்று விளங்கிவந்தவர்களும் இவர்களே. இம்மஹான்கள் எவ்வளவோ வெகு காரியங்களை ஊன்றிப்பார்த்து வர்ணாச்ரமதர்மநியமங்களே ஜன்மதாரகம் எனக்கருதி அநுஷ்டித்துவந்தார்கள். இஃதிவ்விதமிருக்க தற்காலத்தில் "கண்டதே காக்ஷி, கொண்டதே கோலம்" என்று திரியும் மனிதர்கள் வேதவியாஸவசனரூபமான புராண, இதிஹாஸ, பாரதாதிநூல்களை கட்டுக்கதைகளென்று அவமதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சாஸ்திரஉண்மையை விளக்கிக்காட்டி நம்பச்செய்வது 'பகீரத' பிரயத்தனம்போலாகும்.

வாதரோகத்திற்கு உலகில் ஔடதமுண்டு, பிடிவாதரோகத்திற்கு ஔடதம் உலகிலில்லை ஓர்பாமரன் தற்காலம் நடந்துமுடிவு பெற்ற'ஐரோப்பா' மகாயுத்தத்தைத்தனது சிற்றறிவிற்கு எட்டாத காரணத்தால் யுத்தம்நடந்து முடிவுபெற்றதென்பது பொய்யே என்றால் இவனை இனிதிருப்திபெறச்செய்வது எவ்வளவு கஷ்டமானவேலை, இவைகளெல்லாம் நமதுசாஸ்திரங்களில் நம்பிக்கையற்ற அஞ்ஞானிகளின் "பிடிவாத" முரட்டுகுணமே என்பதில் சந்தேகமில்லை. நமது ரிஷிகளின் மஹிமையை ஸமீபகாலத்தில் ஹிமயமலையின் கொடிமுடியைக் காணச்சென்ற நவீனர்கள் நன்கு வெளியிட்டிருக்கிறார்கள் இவர்கள் ஹிமயமலையின்மேல் வெகுதூரம் சென்றபோது அங்கு சில மனிதலட்சணமுள்ளவர்களையும் அனேக மிருகங்களையும், இவைகள் ஸ்நேஹத்துடன் ஸஞ்சரித்து வருவதையும்கண்டு ஆச்சரியங்கொண்டு அவர்களிடமிருந்து

நெருப்பு, முதலிய சிலவஸ்துக்களைப்பெற மனதில்நினைத்தார்களாம். அவர்களுடன் பேசத்தெரியவில்லையாம். இக்காக்ஷியைப் பார்த்த நவீனமனிதர்கள் வெகுஜனங்கள் இத்தத்துவத்தை அறியும்படிச் செய்திருப்பதானது நம்மெல்லோரும் அறிந்தவிஷயமே. மனிதசரீர வியல்புக்கு ஒவ்வாத அதிசீதளமான இந்தபர்வத சிகரத்தில் குரூரமிருகவர்க்கங்களுடன் சிநேக பாவமடைந்து பார்த்த மாத்திரத்தில் பிராணிகளின் மனோகதத்தை அறியப்பாம சக்திவாய்ந்தபுருடர்களின்மஹிமையை நேரில் பார்த்தபிறகும்நமது ரிஷிகளுக்கு அபாரசக்தியுண்டு என்றுகூறும் நமது சாஸ்திரவாக்கியங்களைக்கட்டுக்கதையென்று மதிக்கும் மனிதர்களைச்சீர்திருத்த யாரால்முடியும்? இம்மஹான்களின் அந்தரங்காகசியங்களை அறியவும், அவைகளை சிறிதுமாற்றவும் நம்போலுள்ளவர்களுக்கு சக்தி எது? உலகில் எவ்வளவோமதங்களும், மதாசாரியர்களும் தோன்றிமறைந்திருக்கமது இந்துமதமும் ஆசாரியர்களின் மஹிமையும் அழிவில்லாமல்ப்பிரகாசித்து இக்காலம் வரைநிற்பதற்குக்காரணம் ரிஷிகளின் மஹிமையல்லவோ.

இவைகளை அறியாதநவீனர்கள் தர்மத்தைக் கெடுப்பதான அனுபல்லவியைப்பாடி முன்னோர்களின் ஆசாரானுஷ்டானங்களை வதைசெய்து வருகிறார்கள். ஒன்றிரண்டு சகாப்தங்களுக்கிடையில்தோன்றிய "மேற்றிசையார்" களின் ஆசாரமுறைகள் ஹிந்து வர்ணாச்ரமதர்ம்மவிநாச மூலகளாகின்றன. நமது நவீனர்கள் இந்து மதஜீவனாடி நிலைபெற்றிருக்கும் ஸ்தானத்தை யறியாததாலும் விபரீதாசாரங்களை சிறிது அறிந்திருப்பதாலும் இவர்கள் வாய்க்கு வந்தது "வர்ணாசிரம தர்ம்மம்" என்று நினைக்கிறார்கள். இதுவே ஆஸ்திகர்களுக்கு ஆபத்தாகிறது.

ரோகி ஒருவனுக்கு தக்கஔடதமும், பத்தியமுறையும், நிர்மானிப்பது வைத்தியனின்வேலை. ஜலசௌகரியத்தையும், பூமியின் மேன்மையும், தானியத்தின் குணத்தையும், அறிந்து தகுந்தபடி பயிர்செய்வது நல்லகிருஷிகளின்வேலை என்பதுபோலவே சிருஷ்டிக்குள்ளடங்கிய ஜீவர்களின் முன்ஜன்ம குணகர்மங்களுக்குத் தக்க ஜன்மமும், வர்ணாசிரம தர்ம்மமும்நமக்கு ஈசனாகிய வைத்திய சிரேஷ்டனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வைத்தியனுடைய பத்திய நியமமொழிகளைமறுத்து முறைதப்பி தன்இஷ்டப்படி நடந்த

ரோகி, சுகம்பெறமாட்டானென்பதுபோல ஈசனைஞ்ஞாரூபமான நமது ஜன்மரோக விநாசகரமாகிய வர்ணாசர்ம தர்ம பத்தியநியமங்களையனுஷ்டித்துக் காண்பித்தவர்களும் ஸம்ஸாரவைத்தியர்களுமாகிய ரிஷிகளின் சாஸ்திரவாக்கியங்களை விலக்கி இஷ்டப்படி நடக்தமனிதர்களும் இகபரசுகம் பெறமாட்டார்கள். என்பது நிச்சயம்.

லாபத்தைக்கருதினகிருஷிகன், பூமி, ஜலம், தானியம், இவைகளின் குணதோஷங்களை அறிந்து தகுந்தபூமியில் பயிர்செய்யாமல் நேர்மாறான பூமியில் பயிர்செய்தால் உள்ளதானியமும் நஷ்டப்பட்டு கஷ்டமடைவதுபோல, வர்ணம், ஆச்ரமம், இவைகளுக்குத்தக்க தர்ம்மங்களே ஜன்மலாபமென்றுகருதின ரிஷிகளின் ஆசார நியமங்களைவிட்டு அதற்கெதிரிடையான முறையில் நடந்துவந்தால் இந்தமனித ஜன்மம்கூட நஷ்டப்பட்டு மிகக்கஷ்டமடையவேண்டிவரும் என்பதில், என்ன ஸந்தேகம் ? வைத்தியம் கிருஷிசாஸ்திரம் இவைகளை அறியாதவர்களுக்கு அவ்விஷயத்தில் பற்பல ஸந்தேகமுதிப்பது ஸகஜமே. அதுபோல ஸநாதன வர்ணாச்ரம தர்ம்மாகஸ்யங்களை அறியாத மனிதர்களுக்கும், பல ஸந்தேஹ விபரீதங்களுண்டாவதும் உண்மையே, நேயர்காள் ! நவீன நாகரீகமேதாவிகளும் வர்ணாசிரம தர்ம்ம நியமங்களை இப்பவும் ஆதரித்தேவருகிறார்கள், அதாவது அமெரிக்காவில் (யுனைட்டட்ஸ்டேட்) என்றவிடத்தில் நீக்கிரோஜாதிக்காரர்களை மற்றவர்கள் வஸித்துவரும் இடத்திற்கு வெகுதூரத்தில் வஸிக்க நியமித்திருக்கிறார்கள். தவிர பிரதான வித்தியாலயங்களிலும், தேவாலயங்களிலும், ஜலவசதிகளிலும், ரயில்வண்டிகளிலும், செல்லக்கூடாதென்றுமாத்திரமல்ல, இந்த ஜாதிக்காரர்கள் சிறிது குற்றம் செய்ததாக ஒருவர்சொல்லிவிட்டால் அப்பொழுதே விசாரணையன்றி பிடித்து வதைசெய்துவிடுவது இப்பவும் அனுஷ்டான முறையிலிருந்து வருகிறது. இவர்களின் ஆசாரங்கள் நமக்கு எவ்வளவு நன்மையாகுமென்று ஊகித்தறிந்துகொள்ளுங்கள்.

நமது ரிஷிகளுக்கு கருணையே முக்கிய தனம், தாழ்ந்தவர்ண மனிதர்களை உயர்ந்த வர்ணத்தார்களுக்கு, கைங்கர்யரூபமான அனுஷ்டானத்தால் அவர்களையும் முன்னேற்றமடையும்படி செய்திருக்கிறார்களேயன்றி நிராகரித்துவிடவில்லை. பிராமணனுக்கு

சிச்ருஷைசெய்த சூத்திரனும் அவருடையும் கதியையும் அடைகிறான் என்று பாரதம் கூறுகிறது. நமது ஸுகபோகானுபவத்திற்கு வர்ணாச்ரமதர்மமே முக்கிய பத்தியநியமம். அதில்லாமல் எக்கர்மம் செய்தாலும் பத்தியமுறையன்றி உட்கொண்ட ஔடதம் போல அனர்த்தத்தையே விளைவிக்கும், கௌசிகனும் அசுவதன் என்ற பிராம்மணனும் நியமலங்கனத்தால் மானமழிந்தானென்று புராணம்புத்தி புகட்டுகிறது. இதனால் வர்ணாச்ரமதர்மத்தை ஆதியில் வகுத்தவர் ஸர்வேச்வரனும் அதைக்கையாண்டுவந்தவர்கள் மனுமுதலிய ரிஷிகளும் அவர்களின் வம்சபரம்பரையிலுதித்த ஆஸ்திகசிகாமணிகளான நம்போலுள்ளவர்களும் நாளதுவரை பழக்கத்தில் கொண்டுவந்திருப்பதானது நன்கு விளங்குகிறபடியால் இம்முறையைத் தப்பிநடக்க மனிதர்களுக்கு சக்தி இல்லையென்பதும் உண்மை.

श्रुतिस्मृती ममैवाज्ञा यस्तामुल्लंघ्य वर्तते ।

என்ற பகவத்வாக்கியத்தால் அவரது ஆஞ்ஞாநியமத்தைத்தப்பி நடப்பவன் ஆபத்தினுள்பட்டவனுவான் என்றபடியால் வர்ணாச்ரமதர்மநியமம் மனிதஜன்மமடைந்தவர்களுக்கு ரோகமை நீக்கக்கூடிய நுட்பமான ஔடதமென்பதும் அதை உட்கொண்டு தீர வேண்டுமென்பது ஈசனின் கட்டளை என்பது ஸித்தம். சுபம்.

S சங்கரராம சாஸ்திரிகள்
கொட்டாரக்கரை.

---

# ஜலதர்மத்தின் பெருமை.

தர்மங்களுக்குள் ஜலதர்மம் முதன்மையானது.

ऋषयः— सर्वज्ञ सूत सकलधर्माधर्मविचक्षण ।
ज्ञातं तव कृपायोगात् तटाकस्थापनं शुभम् ॥
इदानीं श्रोतुमिच्छामः कूपस्थापनजं फलम् ।
सम्प्रसन्तानजैः पुण्यैः एधमानाः तपस्विनः ॥

பூர்வம் கிருதயுகத்தில் சௌனகாதிமுனிகள் ஸூதமுனிவரைப் பார்த்து எல்லாந்தெரிந்தஸூதமுனியே உம்முடைய கிருபையால்

சுபகரமான தடாகஸ்தாபனக்கிரமம் தெரியவந்தது. இப்பொழுது கூபஸ்தாபனவிதியைத் தெரிந்துகொள்ளுவதற்கு வேண்டிக் கொள்ளுகிறேம். ஸப்தஸந்தானங்களாலே உண்டாகும் புண்யத்தால் விருத்தியடையும் மஹானுபாவர்கள் பூலோகத்தில் கிருதகிருத்யாளல்லவா?

ஸூதர் சொல்லுகிறார்—

निर्जले कूपमारोप्य जलं यच्छति यः पुमान् ।
तं देवा जीवितस्यान्ते तोषयन्ति सुधाजलैः ॥

உலகத்தில் தடாகப்பிரதிஷ்டையால் உண்டாகும் புண்யம் அதிகமென்றும் அனேக ஜீவராசிகளுக்கு ஜீவாதாரமென்றும் ஸ்நானத்தாலும் பானத்தாலும் பிராணிகள் அடையும்ஸுகத்தால் ஈசுவரானுக்கிரகம் தன்னாலேயே உண்டாகிறதென்றும் ஈசுவரானுக்கிரகத்தால் மோக்ஷஸாம்ராஜ்ய லக்ஷ்மீ பிராப்திவரை பலனுண்டாகிறதென்றும், தடாகம் இருக்கும்வரை வம்சவிருத்தியும், ஐசுவர்ய விருத்தியும் அவன் பிதிருக்களுக்கு சுவர்க்கவாஸமும் உண்டென்றும் தடாகக்கரைகளில் பல விருக்ஷங்களை உண்டுபண்ணி தர்மத்திற்கு விட்டுவிட்டால் அனந்தபுண்யமென்றும் பலவிதமாய்ப் புகழ்ந்துஸப்தஸந்தானங்களில் ஒன்றாகிய கூபஸ்தாபனபுண்ணியத்தைச் சொல்லுகிறார்.

ஜலமில்லாத இடத்தில் எவனொருவன் கூபஸ்தாபனம்செய்து ஜலத்தைக் குடிக்கிறானோ அவனை சரீராந்தத்தில் தேவதைகள் விமானத்திலேத்தி திவ்யமான அப்ஸரோகானம் பிரகாசிக்க கெருடோரக யக்ஷாளுடன் கூடினவனாகச் செய்து அமிருதத்தைக் கொடுத்து ஸ்வர்க்கத்தைச் சேர்ப்பிப்பார்கள்.

पुरा धर्मात्मजः श्रीमान् राज्यं कुर्वन्यथाविधि ।
भ्रातृभिस्सहितो वीरः कूपानि सुबहून्यसौ ॥ इत्यादि ।

பூர்வம் தர்மநந்தனர் தம்பிகளுடன் ராஜ்யம் நடத்திவருகையில் அனேக தடாகங்களை நிர்மித்து கிரீஷ்மகாலத்தில் ஜலமில்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுவதைப்பார்த்து திவ்யோதகம் உண்டுபண்ண நினைத்து கெங்கைக்குப்போய் கெங்கையிலும் ஜலம் சுவல்பமாகி இருப்பதுகண்டு கிராமம்கிராமமாக அனேக அசோஷ்யகூபங்களை உண்டுபண்ணி அவர்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்தார்.

पुरा जन्मनि राजेन्द्र द्विजोऽहं सधनोऽभवम् ।
यस्य कस्य न मत्तोऽभू दुपकारस्तु कश्चन ॥ इत्यादि ।

தர்மபுத்திரர் கிராமவிசாரணை செய்துவரும்காலத்தில் ஓர்அக்ரஹாரத்தில் ஒருபிராமணனை நீரேன் இப்படி தரித்திரமனுபவிக்கிறீர்என்று கேழ்க்க—அவர் தான்பூர்வஜன்மாவில் தனவான் என்னாலே யாருக்கும் எந்தஉபகாரமும் கிடையாது ஒருநாள் ஒருஉத்தம தபஸ்விவந்து ஐயா, வெய்யிலால் வருந்தி பசிதாகத்தின் கொடுமையால் தபிக்கிறேன் கொஞ்சம் அன்னம் ஜலம் வேண்டுமென்று கேழ்க்க என்னால் ஸத்காரம் அடையாமல் கோபமடைந்து நீதரித்திரனாக என்றுசபித்தார். உடனே நான்பயந்து கொஞ்சம் அன்னம் ஜலம் தந்து சாபத்தின் மோசனம் வேண்டினேன் அதற்கவர் எப்பொழுது தர்மபுத்திரர் உன்னிடம் வந்து ஒரு கூபம்வெட்டி வைத்தபலனை உனக்கு தத்தம் செய்கிறாரோ அப்போது உன்தரித்திரம் நீங்குமென்று சொன்னார்.

இதைக்கேட்ட தர்மர் தான்செய்த கூபங்களில் ஒரு கூபப்பிரதிஷ்டைபலனை பிராம்மணனுக்கு தத்தம்செய்ய பிராம்மணனுக்கு சாபம் நீங்கி நாளடைவில் ஐசுவர்யவிருத்தி உண்டாச்சுது. மருமையில் சுவர்க்கதியும் அடைந்தான். அன்னாளில் மஹாராஜாக்கள் நேரே கிராமந்தோறும் சென்று ஜனங்களின் நிலைமையைத் தெரிந்து அவாவர்க்குத்தக்கபடி உபகாரங்களைச் செய்துவந்திருக்கிறார்கள். அந்தவழக்கம் இந்தநாளிலும் இருக்கிறது.

பூரிச்ரவஸ் என்ற பிராம்மணன் துவாதசவர்ஷக்ஷாமத்தில் பிக்ஷைசெய்து திரவியம் ஸம்பாதித்து கிணர்வெட்டி ஜனங்களை ரக்ஷித்தார். இந்த தர்மத்திற்கு மெச்சி ஈசுவரனே பிரத்யக்ஷமாக வந்து அவருக்கு தர்சனம் தர அவர் மோக்ஷம் கேழ்க்க ஈசுவரன் அவரை தன் பதம் சேர்த்துக்கொண்டார். இப்படி தடாகம், கூபம், நடைகிணர் முதலிய ஜலதர்மத்தைப்பற்றி அனேகம் சரித்திரங்களுண்டு.

(தொடரும்)

பனையப்பட்டி வேங்கடேசய்யர்.